**பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப.,**

**செ.மு.எண்:அ5/ 1861/2024** **நாள்: 06.03.2024**

பொருள் : பொதுப்பணி – பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சென்னை–5 கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.வ.இர.பரிதி என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக

படிக்கப்பட்டவை: :

1. அரசாணை எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 23.01.2020.
2. அரசாணை எண்.33, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 08.03.2023.
3. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயல்முறை ஆணை எண்.அ5/7248/2021, நாள். 12.03.2022.
4. மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை எண்.எச்7/8485/2023, நாள். 11.07.2023
5. மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.எச்7/646/2021, நாள். 18.05.2023.

********

**ஆணை**

மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தேனி மாவட்டம், முத்தனம்பட்டி அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் முதுகலைப்பட்டதாரி ஆசிரியராக பணியில் இருந்த போது 07.11.2013 அன்று இறந்த திரு.செ.வனராசா இதயகீதன் என்பவரது மகன் திரு.வ.இர.பரிதி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பார்வை 3–ல் படிக்கப்பட்ட செயல்முறையின் மூலம் உத்தரவிடப்பட்டது.

2) திரு.வ.இர.பரிதி என்பவரின் பிறந்த நாள்.03.06.1988, தனியர் பணியில் சேர்ந்த நாள்.08.04.2022 அன்று தனியரின் வயது 33 வருடம், 10 மாதங்கள் மற்றும் தனியர் கணினி பொறியியல் (B.E–CSE) படிப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே, தனியர் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதிகளின் படி இளநிலை உதவியாளருக்குரிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைப் பெற்றிருப்பதால் வயது மற்றும் கல்வித்தகுதிகளில் எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லை. மேலும், தனியரின் கல்வி சான்றிதழ்கள் அரசுச் தேர்வுத் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டு மெய்தன்மை உடையது என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

3) எனவே, பார்வை 2-ல் படிக்கப்பட்ட அரசாணையின் (G.O. (Ms.) No.33 நாள்: 08.03.2023 Labour Welfare and Skill Development (Q1) Department) பிற்சேர்க்கை அறிவிப்பு எண் 16 மற்றும் தமிழ் நாடு அமைச்சுப்பணிவிதிகளில் விதி எண் 10 பிற்சேர்க்கை (II) இன் படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.வ.இர.பரிதி என்பவருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 08/04/2022 முற்பகல் முதல் தனியரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

4) மேலும், பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து, நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு தனியர் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத்தொகைகள் ஏதேனும் இருப்பின் அவற்றைப் பெறத் தகுதியுடையவராகிறார் என்று ஆணையிடப்படுகிறது.

5) தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் விதி எண்.32-இன்படி, இவர் மூன்றாண்டு தொடர்பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவ காலத்தில் வைக்கப்படுகிறார்.

6) மேலும் தனியருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை தனியரது பணிப் பதிவேட்டில் மேற்கொள்ளுமாறு மதுரை, கள்ளர் சீரமைப்பு, இணை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் தகுதிகாண் பருவம் விளம்புகை செய்து உத்தரவிடப்பட்ட பின்னர் இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவர் ஆவார் என்றும் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-xxxxx

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர்

11/3/2024

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்காக

11/3/24

**பெறுநர்**

திரு.வ.இர.பரிதி,
இளநிலை உதவியாளர்,
இணை இயக்குநர் அலுவலகம் ( கள்ளர் சீரமைப்பு ),
மதுரை -20 ………………உரிய வழிமுறையாக

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது**

அரசுச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

**நகல்**

1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3.
2. இணை இயக்குநர், கள்ளர் சீரமைப்பு , மதுரை – 20
3. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
4. தனியரின் பணிப்பதிவேடு.
5. அ5 இருப்புக் கோப்பு